# மாநகராட்சி மன்ற வாரிய உறுப்பினர்

# குடும்பத்திற்கு குத்தகையா?

## விசாரணை நடத்தப்படும் என்கிறார் அமைச்சர்

கோலாலம்பூர், பிப். 3-

மேம்பாட்டு திட்டம் தொடர்பான குத்தகை வழங்குவதில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று கூறப்படுவது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

கோலாலம்பூர் மாநகர மன்றத்தில் இது போன்ற முறைகேடுகளும் ஊழல்களும் நிகழ்வதை அனுமதிக்க முடியாது.

இந்த விவகாரத்தில் சமரசம் காண முடியாது. எனவே வெளியாகியிருக்கின்ற புகார்கள் குறித்து ஒளிவு மறைவு இன்றி விசாரணை நடத்தப்படும் என்றார் அவர்.

கடந்தாண்டு பிற்பகுதியில் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாக மாநகராட்சி மன்றம் குத்தகையை வழங்கியிருக்கிறது. சுமார் 40



லட்சம் வெள்ளி மதிப்புள்ள அந்த மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான குத்தகை கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் வாரிய உறுப்பினர் ஒருவரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

பொது டெண்டர் மூலமாக வழங்கப்படாமல் வாரிய உறுப்பினருக்கு சாதகமாக அவரது குடும்பத்திற்கு இந்த குத்தகை வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுவது குறித்து நாங்கள் விசாரணை நடத்த முடிவு செய்திருக்கிறோம் என்று கடந்த ஜனவரி 28 ஆம் தேதி கோலாலம்பூர் நகர மேயர் மைமுனா கூறினார்.

இது குறித்து கருத்துரைத்த போது கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படக்கூடாது. எனவே இந்த விவகாரம் தொடர்பாக பகிரங்க விசாரணை நடத்தப்படும் என்றார் ஸலிஹா முஸ்தாபா.